**செய்தி வெளியீடு எண்: 720** **நாள்: 27.10.2017**

**செய்தி வெளியீடு**

இன்று (27.10.2017) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான கால அட்டவணை குறித்தும் அதற்கான முன்னேற்பாடுகள் குறித்தும் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டது.

தமிழ்வழி கல்வி மூலம் கல்வி பயின்றோருக்கு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் உரிய முன்னுரிமை வழங்கப்படுவது உறுதி செய்துக் கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுவோர், தேர்வுகள் நடத்தப்படும் தேதிகளை அறிந்து கொண்டு அத்தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதற்காக தேர்வு காலஅட்டவணையை முன்கூட்டியே வெளியிடுவது குறித்தான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற பல்வேறு அரசுப் பணிகளுக்கான தேர்வுகளுக்கான அறிவிக்கை வெளியிடப்படுவதிலிருந்து முதனிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றுடன் அப்பணியிடத்திற்கான இறுதி முடிவினையும் ஓராண்டுக் காலத்திற்குள் வெளியிடுவதற்கான வழிமுறைகள் தேர்வாணையத்தின் அலுவலர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

செயலாளர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**